இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 814/2022

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 26930/2019-லிருந்து எழுகிறது)

மோங்கியா ரியால்டி அண்டு பில்ட்வெல்
பிரைவேட் லிமிடெட் ....மேல்முறையீட்டாளர்

எதிர்

மாணிக் சேத்தி ...எதிர்மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய். சந்திரசூட்:

1. அனுமதி வழங்கப்பட்டது

2. இம்மேல்முறையீடு, முறையான முதல் மேல்முறையீடு (மு.மு.மே.) எண் 5/2019-இல் டெல்லி உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசரின் தீர்ப்புரையிலிருந்து எழுகிறது. 2018 ஆகஸ்ட் 16-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மூலம் காலவரையறை என்ற காரணத்தின்பேரில் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உயர் நீதிமன்றம், அந்தக் காரணத்தின்பேரிலான உரிமை வழக்கின் தள்ளுபடியை உறுதிசெய்தது.

3. மேல்முறையீட்டாளர், தொகை ரூ.1,11,63,633/-ஐ உரிமை வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து முழுத்தொகையும் கைவரப்பெறும்வரையில் ஆண்டொன்றுக்கு 18% வட்டியுடன் சேர்த்து வசூலிப்பதற்காக, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் [உ.வி.மு.ச.], 1908-இன் கட்டளை 37-இன் கீழ் 2017 மார்ச் 31 அன்று உரிமையியல் வழக்கு எண் 76/2017 (புதிய எண் 355/2017) என்றதொரு உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார். எதிர்மேல்முறையீட்டாளர், 2017 மே 24 அன்று ஓர் எதிர்வழக்குரையைத் தாக்கல் செய்தார். உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்பட்டுள்ளது என்ற காரணத்தின்பேரில் வழக்குரையை நிராகரிப்பதற்காக உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை நீதிமன்றம் 2018 ஜனவரி 4 அன்று உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்பட்டுள்ளதா? என்பதன்பேரில் ஒரு முதல் நிலைப் பிரச்சினையை வனைந்தது. அதற்கு பதிலுரைத் தாக்கல் செய்ய 2018 மார்ச் 15 அன்று மேல்முறையீட்டாளருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது, மேலும், முதல் நிலைப் பிரச்சினையின்பேரில் வாதங்களை முன்வைப்பதற்காக உரிமை வழக்கு 2018 ஏப்ரல் 26-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் 2018 ஏப்ரல் 20 அன்று அதற்கு பதிலுரைத் தாக்கல் செய்தார். வழக்கு 2018 ஏப்ரல் 26-க்கும், 2018 மே 23-க்கும் விசாரணை நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டது. 2018 ஜூலை 26 அன்று மேல்முறையீட்டாளரால் ஒத்திவைப்பதற்காக செய்யப்பட்ட வாதத்தை விசாரணை நீதிமன்றம் நிராகரித்தது. எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வாய்மொழி வாதங்கள் கேட்கப்பட்டன, மேலும், எதிர் வாதங்களைத் தாக்கல் செய்ய மேல்முறையீட்டாளருக்கு பதினைந்து நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. மேல்முறையீட்டாளர், 2018 ஆகஸ்ட் 10-க்கு முன் எதிர் வாதங்களைத் தாக்கல் செய்யவில்லை.

2018 ஆகஸ்ட் 16 அன்று விசாரணை நீதிமன்றம் மேற்கொண்டு கால அவகாசம் ஏதும் வழங்க மறுத்து அதனுடைய தீர்ப்புரை மூலம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக காலவரையறை என்ற பிரச்சினைத் தீர்வு செய்தது. மேல்முறையீட்டாளர், மு.மு.மே எண் 5/2019 என்ற மேல்முறையீட்டில் இவ்விடயத்தைக் கொண்டுசென்றர். உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசர் 2019 செப்டம்பர் 4-ஆம் நாளிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மூலம் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தார்.

4. மேல்முறையீட்டாளரின் வழக்கு யாதெனில், எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளரிடம் அவ்வப்போது வணிகக்கடன் வழங்குமாறு வேண்டினார், அந்த வேண்டுகோளும் மேல்முறையீட்டாளரால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. கடன்கள் ஆண்டொன்றுக்கு 18% வட்டியுடன் சேர்த்து திருப்பிக்கொடுக்கப்படவேண்டுமென்று கூறப்பட்டது. மேல்முறையீட்டாளர், ஆக்சிஸ் வங்கியில் வரையப்பட்ட காசோலையின் மூலம் 13.6.2012 அன்று தொகை ரூ.10 இலட்சம், 11.7.2012 அன்று தொகை ரூ.18 இலட்சம், 21.12.2012 அன்று தொகை ரூ.15 இலட்சம் ஆகியவற்றுடன் மேற்கொண்டு தொகை ரூ.39 இலட்சமும் முன்பணமாகக் கொடுத்துள்ளதாகக் கூறுகிறார் என்பதாகும். எதிர்மேல்முறை யீட்டாளர் தனது கடன்பொறுப்பைப் பகுதியாக தீர்த்தார், மேலும் அவர், மீதத் தொகையான ரூ.1,11,63,633/-க்கு ஆண்டொன்றுக்கு 18% வட்டி சேர்த்து தீர்ப்பாணை பெறுவதற்குரியவராவார் என்பது மேல்முறையீட்டாளரின் வழக்கு விவரமாகும். வழக்குரையின் 5-ஆவது பத்தியில் பின்வரும் உறுதிக்கூற்றுகள் அடங்கியுள்ளன:

"மேற்கூறிய கடன்கள் ஆண்டொன்றுக்கு 18% வட்டியுடன் சேர்த்து திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும் என்ற புரிந்துணர்வோடு எப்போதும் பிரதிவாதிக்கு மேற்கூறிய கடன்கள் வாதியால் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. மேற்கூறிய கடன்கள், கடன் கொடுக்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் செலுத்தத்தக்கதாகும். கடனின் கடைசி தவணை, அதாவது கடைசியாக 2014 ஏப்ரல் 9-இல் செலுத்தத்தக்கதாகும். எனினும் பிரதிவாதி, வாதிக்கு ஆண்டொன்றுக்கு 18% என மேற்கூறிய கடன் தொகைகளுக்கு அரையாண்டு அடிப்படையில் வட்டி செலுத்தவேண்டும்."

5. கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கான நாளிலிருந்து இரண்டரை ஆண்டுகள் கழிந்துவிட்டபோதிலும், எதிர்மேல் முறையீட்டாளர் நிலுவைத் தொகையைச் செலுத்தவில்லை என்று வழக்குரையின் 10-ஆவது பத்தியில் வழக்குரைக்கப் பட்டுள்ளது. தரப்பினர்களுக்கிடையே நடப்பு கணக்கு நிருவகிக்கப்பட்டு வருவதாக மேல்முறையீட்டாளரும் ஒரு வழக்கு தொடுத்துள்ளதைத் தொடர்ந்து, கடைசியாக 2013 அக்டோபர் 24 அன்று தொகை செலுத்தப்பட்டது.

6. எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையிலுள்ள எதிர்வாதமாவது, எதிர்மேல்முறை யீட்டாளர் வீடு, மனை, நிலம் வாங்கும்-விற்கும் சேவைகளை மேல்முறையீட்டாளருக்கு வழங்கி வருவதற்காக, மேல்முறை-யீட்டாளரால் தரகுத் தொகை கொடுக்கப்பட்டு வந்தது. வணிக நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டுவந்த தொகை, தீயயெண்ணத்தின்பேரில் கடன் பரிவர்த்தனைகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. சில

சந்தர்ப்பங்களில், சொத்துகளில் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்வதற்காக தொகை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. கடன் பரிவர்த்தனைகள் ஏதும் இருந்தன என்பதை எதிர்மேல்முறையீட்டாளர் மறுத்துள்ளார், அதற்குமாறாக, தரப்பினர்களுக்கிடையேயான பரிவர்த்தனை என்பது எதிர்மேல்முறையீட்டாளரால் செய்துவரப்படும் வீடு, மனை, நிலம் வாங்கும்-விற்கும் தொடர்பான நடவடிக்கைகளுக்கு மேல்முறையீட்டாளரால் தரகுக்காக கொடுக்கப்படும் தொகையாகும் என்ற வாதத்தை வைத்துள்ளார்.

7. காலவரையறை என்ற வினாவின்பேரில் வனையப்பட்ட முதனிலைப் பிரச்சினையின் அடிப்படையில், எதிர்மேல்முறையீட்டாளரால் சான்றேதும் அளிக்கப்படவில்லை. மேல்முறையீட்டாளர் எதிர்வாதங்களை தாக்கல் செய்திருக்கவில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, விசாரணை நீதிபதி, வழக்குரைஞர்களின் வாதங்களின் அடிப்படையிலேயே முதல் நிலைப் பிரச்சினையைக் கேட்டறிந்தார். 2013 ஜூன் 20 அன்று மேல்முறையீட்டாளரால் கடைசியாக தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பது வழக்குரையின் 10-ஆவது பத்தியிலுள்ள ஏற்புகையாகும், மேலும், உரிமை வழக்கு 2017 ஏப்ரல் முதல் நாளன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அது மூன்றாண்டுகள், ஒன்பது மாதங்கள் மற்றும் பத்து நாட்கள் கழித்து காலவரையறையால் தடைசெய்யப்பட்டுள்ளது என விசாரணை நீதிபதி தீர்மானித்துள்ளார்.

8. மேல்முறையீட்டில், 2013 அக்டோபர் 24 அன்று கடைசியாக தொகை ரூ.3 இலட்சம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், கடைசியாக தொகை கொடுக்கப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகள் கழித்து 2017 மார்ச் 31 அன்று உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் உயர்

நீதிமன்றமும் தீர்மானித்துள்ளது. மேலே எடுத்துரைக்கப்பட்டுள்ள வழக்குரையின் 5-ஆவது பத்தியிலுள்ள உறுதிக் கூற்றை விவாதிக்கையில், மேல்முறையீட்டாளர் ஒரு நிறுமமாக உள்ளதால், "ஒரு நிறுமம் அதனுடைய வாடிக்கையாளர்களுடன் வாய்மொழியான பரஸ்பர புரிந்துணர்வு கொண்டிருப்பதாக எதிர்ப்பார்க்கப்படலாகாது " என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. கடனானது, கடைசி தவணையைச் செலுத்திய நாளிலிருந்து ஓராண்டுக்குள் திரும்பச் செலுத்தத்தக்கது என்பதற்கு எழுத்துப்பூர்வ உடன்படிக்கை ஏதுமில்லையெனக் குறிப்பிட்ட உயர் நீதிமன்றம், அத்தகையதொரு நிபந்தனை, தரப்பினர் களுக்கிடையேயான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமைய வேண்டும் எனத் தீர்மானிப்பது கடினமாக இருக்குமென தீர்மானித்துள்ளது. இறுதியில், மேல்முறையீட்டாளரின் வழக்கை ஏற்றுக்கொண்டு 2000-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட கடனை 2019-இல் செலுத்திவிடவேண்டும் என வாய்மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே 2020-இல் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு உரிய காலவரையறைக்குள் உள்ளது என்றும் ஒரு வாதத்தை எழுப்ப வாதிக்கு வாய்ப்பளிக்கப்படுமானால், அது தவறான முன்னுதாரணத்திற்கு வழிகோலும் என்றும் உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசர் கருத்துத் தெரிவித்தார்.

9. மேல்முறையீட்டாளரின் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.உதய்குப்தா அவர்களால் இரு வாதங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. முதலாவதாக, கடனானது கடைசித் தவணை செலுத்தப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்குள், அதாவது, 2014 ஏப்ரல் 9-க்குள் திருப்பிக்கொடுக்கத்தக்கது என்பதாக ஒரு வெளிப்படையான கூற்றை வழக்குரையில் 5-ஆவது பத்தியில் உள்ள உறுதிக்கூற்றுகள் தெரிவிப்பதாக வாதிடப்பட்டுள்ளது.

எனவே, 2017 மார்ச் 31 அன்று தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு உரிய காலத்திற்குள்ளாகவே உள்ளது. எந்நேர்விலும், இது சான்றின் அடிப்படையில் விசாரிக்கப்படவேண்டிய வழக்கேயன்றி, முற்றிலும் வாய்மொழி வாதங்களின் அடிப்படையில் தீர்வுசெய்யப்பட்டிருக்கக் கூடாது என்று வாதத்தின் இந்தக்கூறின் அடிப்படையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக, வழக்குரையில் தரப்பினர்களுக்கிடையே வெளிப்படையாகவும், தொடர்ச்சியாகவும் நடப்புக் கணக்கு இருந்துவந்ததாக வாதமும் உள்ளது என்றும், இது விசாரணையில் அளிக்கப்பட்ட சான்றின் அடிப்படையில் தீர்வுசெய்யப்படவேண்டும் என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

10. எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சஞ்ஜய் ஷேகல் இவ்வாதங்களை எதிர்த்து, (i) கடன் நடவடிக்கை இருந்ததாகச் சொல்லப்படுவதைத் தெளிவுபடுத்தக்கூடிய எழுத்துமூல உடன்படிக்கை எதுவும் தரப்பினர்களுக்கு இடையே இல்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும்; (ii) கடன் பரிவர்த்தனையே இல்லையென்றும், வீடு, மனை, நிலம் வாங்கும்-விற்கும் பரிவர்த்தனைகள் தொடர்பான தரகுக்காக மேல்முறையீட்டாளரால் எதிர்மேல் முறையீட்டாளருக்கு தொகை செலுத்தப்பட்டது என்றும்; (iii) கடைசியாக 2013 அக்டோபர் 24 அன்று பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், 2017 மார்ச் 31 அன்று தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு காலவரையறையால் தடை செய்யப்பட்டுள்ளது என்றும்; (iv) தரப்பினர்களுக்கிடையே பரஸ்பர கொடுக்கல் வாங்கல் இருந்ததாகக் குறிப்பிடுவதற்கு வெளிப்படையான, தொடர்ச்சியான பரஸ்பர நடப்பு கணக்கு ஏதுமில்லை என்றிருந்தாலும், காலவரையறைச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 1-இன் பொருந்துகை இல்லை என்றும்;

(v) இது, வழக்குரையின் 3-ஆவது பத்தியில் அடங்கியுள்ள உறுதிக்கூற்றுகளிலிருந்து தெளிவாகிறது, இதில், மேல்முறையீட்டாளர்தான் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பணம் கொடுத்துவந்தார் என மேல்முறையீட்டாளர் ஒரு வாதத்தை தொடுத்துள்ளார் என்றும் பணிந்துரைத்துள்ளார்.

11. கடன்கள் கடைசித் தவணை நாளிலிருந்து ஓராண்டுக்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டும் என மேல்முறையீட்டாளர் வழக்குரையின் 5-ஆம் பத்தியில் ஒரு வாதத்தைத் திட்டவட்டமாகத் தொடுத்துள்ளார். மேல்முறையீட்டாளரின் வழக்கு, உரிமை வழக்கில் அளிக்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நிரூபிக்கப்பட வேண்டும். அத்தகையதொரு பிரச்சினை, எதிரெதிர் வாதாடும் தரப்பினர்களின் சார்பாக வலியுறுத்தப்பட்ட சான்றின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்பட்டிருக்கக் கூடாது. எதிர்மேல்முறையீட்டாளர் கடன் பரிவர்த்தனைகள் இருந்ததை மறுத்து, மேல்முறையீட்டாளர் தரகுக்கான பணத்தைதான் கொடுத்தார் என்ற வாதத்தை எழுப்பியுள்ளார். தரப்பினர்களுக்கிடையேயான வணிக நடவடிக்கைகளின் தன்மையின்பேரில் இருவேறான கூற்றுகள் உள்ளன, மேல்முறையீட்டாளர் அதனை ஒரு கடன் எனக் குறிப்பிடுகிறார், ஆனால் எதிர்மேல்முறையீட்டாளர் வீடு, மனை, நிலம் வாங்கும்-விற்கும் சேவைகளுக்கான தரகு என்ற தன்மையில் உள்ளதாகக் கூறுகிறார்.

12.மேல்முறையீட்டாளரின் கோரிக்கை, காலவரையறையால் தடைசெய்யப்பட்டுள்ளதா? என்ற பிரச்சினையை, தரப்பினர்களுக்கிடையேயான நடவடிக்கை களின் தன்மையிலிருந்து தனியாகப் பிரித்துப்பார்க்க முடியாது.

எந்நேர்விலும், வழக்குரையின் 5-ஆவது பத்தியில் எழுப்பப்பட்டுள்ளவாறான மேல்முறையீட்டாளரின் வாதம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது விசாரணையில் அளிக்கப்படும் சான்றினைச் சார்ந்திருக்கிறது என்பதாகும். காலவரையறை என்ற பிரச்சினையின் அடிப்படையில் வாதங்களை முன்வைக்குமாறு தரப்பினர்களுக்கு உத்தரவிட்டு, கற்றறிந்த விசாரணை நீதிபதி அவர்களால் பின்பற்றப்பட்டமுறை சட்டத்திற்குப் புறம்பானதாகும். இவ்வழக்கில் காலவரையறை என்ற பிரச்சினைக்கு சான்றளிக்கப்படவேண்டியிருக்கிறது.

13. ஒரே உரிமை வழக்கிலிருந்து சட்டம் மற்றும் சங்கதி என்ற இவ்விரண்டையும் சார்ந்த பிரச்சினைகள் எழுகிறபோது, நீதிமன்றம் சட்டஞ்சார்ந்த பிரச்சினையை முதலில் விசாரித்து, தீர்வுசெய்யலாம் என உ.வி.மு.ச., கட்டளை XIV. விதி 2 வரையறுக்கிறது. இந்த நோக்கத்திற்காக வகையம் இரு சட்டஞ்சார்ந்த பிரச்சினைகளைக் குறிப்பிடுகிறது, அவை (i) நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு மற்றும் (ii) அவ்வப்போது அமலிலுள்ள ஏதேனும் சட்டத்தால் உரிமை வழக்குக்கு தடையிடுதல், இவ்வகையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது,

> 2. அனைத்து பிரச்சினைகளின்பேரிலும் நீதிமன்றம் தீர்ப்புப் பகருதல்வேண்டும் (1) முதல்நிலைப் பிரச்சினை ஒன்றின்பேரில் ஒரு வழக்கானது தீர்மானிக்கப்படலாம் என்றாலும், (2) -ஆவது உள் விதியின் வகைமுறைகளுக்குட்பட்டு அனைத்து பிரச்சினைகளின்பேரிலும் நீதிமன்றம் தீர்ப்புப் பகருதல்வேண்டும். (2) ஒரே உரிமை வழக்கில் சட்டம், சங்கதி ஆகிய இரண்டும் பற்றிய பிரச்சினைகள் எழுமிடத்தும், வழக்கு அல்லது அதன் பகுதி ஏதும் சட்டப் பிரச்சினையின்பேரில் மட்டுமே முடிவு செய்யப் படலாம்

என்று நீதிமன்றம் கருத்துக்கொள்ளுமிடத்தும், அந்தப் பிரச்சினையானது

(அ) நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு பற்றியதாக இருக்குமானால், அல்லது

(ஆ) அந்த உரிமை வழக்கிடுவதற்கு அவ்வப்போது அமலிலிருக்கும் சட்டம் எதனாலும் உண்டாக்கப் பட்ட தடை ஒன்று பற்றியதாக இருக்குமானால், நீதிமன்றம் அந்தப் பிரச்சினையை முதலில் விசாரிக்கலாம் மற்றும் அந்த நோக்கத்திற்காக, அது தக்கதெனக் கருதுமானால், அந்தப் பிரச்சினை பின்னர் தீர்மானிக்கப்படும் வரையில், மற்றப் பிரச்சினைகளைத் தீர்வுசெய்வதை ஒத்திவைக்கலாம் மற்றும் அந்தப்பிரச்சினையின் பேரிலான தீர்மானத்திற்கிணங்க அந்த உரிமை வழக்கை மேல்நடத்தலாம்

14. **நஸ்லி நெவில் வாடியா எதிர்-ஐவொரி பிராபர்டீஸ்** [(2020) 6 எஸ்.சி.சி. 557] என்ற வழக்கில் காலவரையறை என்ற பிரச்சினை, கட்டளை XIV, விதி 2-இன் கீழ் ஒரு முதல் நிலைப் பிரச்சினையாகத் தீர்மானிக்கப்படலாமா? என்பதே இந்நீதிமன்றத்தின் முன்பான பிரச்சினையாகும். காலவரையறை என்ற பிரச்சினை ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியின் அடிப்படையிலானதெனில், அது கட்டளை XIV, விதி (2) (ஆ)-இன் கீழ் முதல் நிலைப் பிரச்சினையாக முடிவு செய்யப்படலாம். எனினும், காலவரையறைச் சட்டம் குறித்த பிரச்சினையைச் சுற்றியிருக்கும் சூழ்நிலைகள் குறித்து மறுத்துரைக்கப் படுமானால், அது ஒரு முதல் நிலைப் பிரச்சினையாக முடிவு செய்யப்பட இயலாது. இந்நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைத்துள்ளது:

51. [.....] கட்டளை 14, விதி 1-இன்படி, சங்கதி அல்லது சட்டத்தின் முக்கிய அறுதியுரை, ஒரு தரப்பினரால்

உறுதிசெய்யப்பட்டு, மற்றவரால் மறுக்கப்படுகிறபோது பிரச்சினைகள் எழுகின்றன. முக்கிய அறுதியுரையின் பேரில் வனையப்படும் பிரச்சினைகள், மற்றொரு தரப்பினரால் மறுக்கப்படுகின்றன. சங்கதிகள் குறித்த பிரச்சினைகளும், சட்டம் குறித்த பிரச்சினைகளும் உள்ளன. குறிப்பிட்ட சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்படும் நேர்வில், சட்டம் குறித்த பிரச்சினை எழுந்து, அது ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளின் முடிவின் மீது சார்ந்திருக்குமெனில், இந்த ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளின்பேரிலும், கட்டளை 14, விதி 2-இன் வகையங்களின் கீழான சட்டம் குறித்த முதல் நிலைப் ஒத்திவைக்கலாம் மற்றும் அந்தப் பிரச்சினையின் பேரிலான தீர்மானத்திற்கிணங்க அந்த உரிமை வழக்கை மேல்நடத்தலாம். பிரச்சினையின்பேரிலும் நீதிமன்றத்துக்கு தீர்ப்புப் பகர வழிவகை உள்ளது. கட்டளை 14, விதி 2(1)-இல், நீதிமன்றம் முதல் நிலைப் பிரச்சினையின்பேரில் வழக்கைத் தீர்மானிக்கலாம். அது, அனைத்து பிரச்சினைகளின்பேரிலும் தீர்ப்புப் பகரவேண்டும். கட்டளை 14, விதி 2(2) விலகிச்செல்கிறது, மேலும் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு குறித்தான அல்லது அவ்வப்போது அமலிலுள்ள காலவரையறைச் சட்டம் போன்ற வேறேதேனும் சட்டத்தின் கீழான உரிமை வழக்குக்கு உண்டாக்கப்படும் தடை குறித்தான சட்டப் பிரச்சினையை நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

52. காலவரையறை குறித்த பிரச்சினை, ஒப்புக்கொள்ளப் பட்ட சங்கதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஒரு வழக்கில், கட்டளை 14, விதி 2 (2) (ஆ) -இன் கீழான ஒரு முதல் நிலைப் பிரச்சினை தீர்மானிக்கப்படலாம். காலவரையறை குறித்த சங்கதிகள் மறுக்கப்படுமானால், காலவரையறை குறித்த பிரச்சினையை, ஒரு முதல் நிலைப்

> பிரச்சினையாகவோ அல்லது மறுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் குறித்த ஆய்வுக்குரிய அத்தகைய வேறேதேனும் சட்டப் பிரச்சினையாகவோ கட்டளை 14, விதி 2(2)-இன் கீழும் தீர்மானிக்கப்பட இயலாது. சங்கதிகள் குறித்து மறுத்துரைக்கப்படும் நேர்வில், சட்டப் பிரச்சினையின்பேரில் ஒரு காண்முடிவினை அளிப்பதற்கு அவை அவசியமானதாக தீர்மானிக்கப்பட வேண்டும். அத்தகைய பிரச்சினை ஒரு முதல் நிலைப் பிரச்சினையாகத் தீர்மானிக்கப்பட இயலாது. ஒரு வழக்கில் அதிகாரவரம்பு குறித்த பிரச்சினையும் மறுத்துரைக்கப்படுகின்ற சங்கதிகளை நிரூபிப்பதன் மீது சார்ந்திருக்கிறது. சங்கதிகள் மறுத்துரைக்கப் படுமெனில், அவை முதல் நிலைப் பிரச்சினையாகத் தீர்மானிக்கப்பட இயலாது மற்றும் சட்டம் குறித்த பிரச்சினை, சங்கதிகளின் புலனாய்வு விளைவினைச் சார்ந்திருக்கிறது, அத்தகைய சட்டப் பிரச்சினை ஒரு முதல் நிலைப் பிரச்சினையாக தீர்மானிக்கப்பட இயலாது என்பது, உ.வி.மு.ச.-இன் திருத்தத்திற்கு முன்பாகவும், 1976-ஆம் ஆண்டு திருத்தத்திற்கு பின்பாகவும் இவற்றில் ஏதேனுமொன்றில் அறுதியிடப்பட்ட சட்டக் கருத்துரையாகும்.

15. இவ்வழக்கில் காலவரையறை குறித்த பிரச்சினை என்பது முற்றிலும் ஒரு சட்டப்பிரச்சினை அல்ல எனத் தீர்மானித்திருப்பதால், அது கட்டளை XIV, விதி 2-இன் கீழ் ஒரு முதல் நிலைப் பிரச்சினையாகத் தீர்மானிக்கப்பட இயலாது, எனவே, நாங்கள் மேல்முறையீட்டை அனுமதித்து. விசாரணை நீதிபதி அவர்களின் 2018 ஆகஸ்ட் 16-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையையும், உயர்நீதிமனற் தனியமர் நீதியரசர் அவர்களின் 2019 செப்டம்பர் 4 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையையம் நீக்கறவு செய்கிறோம். கற்றறிந்த விசாரணை நீதிபதி அவர்களால் வணையப்பட்ட காலவரையறை குறித்த பிரச்சிணை, விசாரணை

சமயத்தில் மற்ற பிரச்சினைகளுடன் தீர்மானிக்கப்படலாம். மேல்முறையீடு, மேற்கூறியபடி அனுமதிக்கப்படுகிறது.

16. விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையிலிருப்பின், அவை தீர்வு செய்யப்படும்,

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய். சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்ய காந்த

புதுதில்லி
31.01.2022

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "